குழந்தை

# இலக்கியம்

94.811,
17
CAR

சாரணா கையூம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
- 5 NOV 1963
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KULANTAI ILAKKIYAM

# குழந்தை இலக்கியம்

(முதற்பாகம்)

Part I.

CĀRAṆĀKAIYŪM

பாலகவி

சாரணாகையூம்

KALAIVANI BOOK CENTRE KANDY

169250

ஸாயியா பதிப்பகம்

பதுளை

169250

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு ; 23 2. 63
உரிமை : ஆக்கியோனுக்கு
வெளியீடு : ஸாபியா பதிப்பகம்

விலை 60 ந. பை

0 -10- 0

அடுத்து வெளியாகும்
சாரணா கையூமின் நூல்கள்

குழந்தை இலக்கியம்
(11ம் பாகம்)

நினைவு (கவிதைகள்)

ஒளிவிளக்கு
(பொன் மொழிகள்)

பத்து கட்டுரைகள்
(தொகுப்பு)

இஸ்லாமிய சரித்திர
ஏட்டிலே
(வரலாறு)

**ஸாபியா பதிப்பகம்**
''ஐயூப் பிளேஸ்''
**162, லோவர் வீதி, பதுளை. இலங்கை.**

அச்சிட்டோர்: கமலா பிரஸ், பதுளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கை, தம்பியர்க்கு,

தங்கையர்களே, தம்பியர்களே, உங்களோடு தோழமை கொள்ள எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அந்தப் பெருமகிழ்ச்சிக்குக் காரணமாயிருந்த இப்பாடல்களுக்கு, நான் முதலில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

குழந்தை இலக்கியம் என்ற பெயரில் இச்சிறு கவிதைமலரை உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

மணமிருந்தால், மணந்துகொள்ளுங்கள்.
உங்கள் ஆசிதான் எனது ஆக்கத்திற்குத் திறவுகோல்.

இச்சிறு குழந்தை நூலை குறுகிய காலத்தில் அழகுற அமைத்துத்தந்த **கமலா அச்சக** உரிமையாளருக்கு எனது மனமார்ந்த நன்றி.

பதுளை.
7. 2 63.

மறவாத அன்புடைய,
- **சாரணாகையூம்** -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

எந்தை

ஜனுப் வை. எம். நூர் சாலிம் (ரஹ்)
அவர்கட்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்ல இறைவா வாவாவா
வேண்டும் வரத்தைத் தாதாதா
எல்லாம் அருள வாவாவா
எனக்கு ஒருவரம் தாதாதா.

ஒளியின் வடிவாய் வாவாவா
ஒருதரம் காட்சித் தாதாதா
அழியாப் பொருளே வாவாவா
ஆசைக்கு ஒருவரம் தாதாதா.

எல்லாம் தெரிந்த வல்லவனே
ஏனோ இன்னும் வரவில்லை
பொல்லாப் பையன் நானென்று
பார்க்க உனக்கு மனமில்லையோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பு தருவது பண்பு
பாட்டி அணைத்தால் அன்பு
வடித்து எடுப்பது சாறு
வயிறு கேட்பது சோறு.

தட்டில் வைப்பது லட்டு
தங்கை உடையே பட்டு
சட்டி அறியாது சுவை
சங்கம் ஏறுவது அவை.

கூவிப் பாடுவது குயில்
கூத்து ஆடுவது மயில்
பூவில் மொய்ப்பது வண்டு
பூவையர் தலையில் செண்டு.

நூலில் நெய்வது ஆடை
நெல்லை வைப்பது கூடை
பாலில் இருப்பது சத்து
பாவையர் அணிவது முத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லா(ஹ்) ஒருவனடி பாப்பா — அவன்
ஆதியந்தமில் லாதவனடி பாப்பா.

இரக்க இதயனடி பாப்பா — அவன்
ஈகைக் குணத்தோனடி பாப்பா.

உலகம் படைத்தவனடி பாப்பா — அவன்
ஊழிகால ஜீவனடி பாப்பா.

எல்லாம் வல்லவனடி பாப்பா — அவன்
ஏகாந்த நிலேனடி பாப்பா.

ஐயம் வேண்டாமடி பாப்பா — அவன்
மெய்யான நாயனடி பாப்பா.

ஒருசிறையில் லாதவனடி பாப்பா — அவன்
ஓருருவில் லாதவனடி பாப்பா.

ஒளவியம் அற்றவனடி பாப்பா — அவன்
தெளஹீதின் நாயனடி பாப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரோடும் வீதியுண்டு
தெருவெங்கும் சாலையுண்டு.

பூமணக்கும் சோலையுண்டு
ஆமணக்கு மரமுண்டு.

கோயில் குளமுண்டு
கோபுர விளக்குண்டு.

சாதி சமயமுண்டு
சாத்திரக் காரனுண்டு.

மயிலும் மலையுமுண்டு
மாங்கனித் தோப்புண்டு.

நீராடும் துறையுண்டு.
நீண்ட தெருவுண்டு.

பள்ளி பலவுண்டு
பல்யாக சாலையுண்டு.

அரச மரமுண்டு
ஆடநல்ல திடலுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டு வண்டு வண்டு
வண்டு மலரில் உண்டு.

தண்டு தண்டு தண்டு
தண்டு மரத்தில் உண்டு.

நண்டு நண்டு நண்டு
நண்டு சேற்றில் உண்டு.

சொண்டு சொண்டு சொண்டு
சொண்டு கிளிக்கு உண்டு.

கண்டு கண்டு கண்டு
கண்டு மகிழ்வ துண்டு.

அண்டி அண்டி அண்டி
அண்டிக் கெடுப்ப துண்டு.

தொண்டு தொண்டு தொண்டு
தொண்டில் இன்ப முண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி நிலா ஓடிவா
வெகு விரைவாய் ஓடிவா
துள்ளித் துள்ளி நாமெல்லாம்
தேடுகிறோம் ஓடிவா.

அல்லி உன்னைக் கண்டதும்
ஆசை யாலே மலருது
பள்ளிச் செல்லும் சிறுவர்நாம்
பார்க்க நீயும் ஓடிவா.

கள்ளத் தனம் ஆகுமோ
கருணை உனக் கில்லையோ
வெள்ளி நிலா ஓடிவா
வெண் மதியே ஓடிவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளி உள்ள மீன்கள்
பார்க்க அழகு மீன்கள்
துள்ளித் துள்ளி நீரில்,
திரியும் நல்ல மீன்கள்.

மஞ்சள் சிவப்பு நிறத்தால்,
மனதைக் கவரும் மீன்கள்
மிஞ்சும் உணவைப் போட்டால்,
மிதந்து வரும் மீன்கள்.

நீரில் உள்ள அழுக்கை
நிதமும் சுத்தம் செய்யும்
நீரில் கூடி வாழ்ந்து
நிம்மதி காணும் மீன்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று ஒன்று ஒன்று
ஓதி வணங்கல் நன்று.

இரண்டு இரண்டு இரண்டு
இராகம் பாட்டில் உண்டு.

மூன்று மூன்று மூன்று
முயன்று அறிவைத் தூண்டு.

நான்கு நான்கு நான்கு
நல்லப் பொருளை வாங்கு.

ஐந்து ஐந்து ஐந்து
கையில் உண்டு பந்து.

ஆறு ஆறு ஆறு
அமுத வாழைத் தாறு.

ஏழு ஏழு ஏழு
ஏடு புகழ வாழு.

எட்டு எட்டு எட்டு
ஏழைக் கேது பட்டு.

ஒன்பது ஒன்பது ஒன்பது
ஒன்று கூடி உண்பது

பத்து பத்து பத்து
பார்க்க நல்ல முத்து.

—/o/—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
- 5 NOV 1963
LIBRARY

பட்டணம் நல்ல பட்டணம்
பார்க்க நல்ல பட்டணம்.

கண்ணைப் பறிக்கும் காட்சிகள்
கணக் கில்லாத பட்டணம்.

மாடு, குதிரை வண்டிகள்
மண்டிக் கிடக்கும் பட்டணம்.

விண்ணை முட்டும் கோபுரம்
வீதி யெங்கும் சாலைகள்,

விரும்பி உண்ண பண்டங்கள்
விலைக்கு வாங்க பொம்மைகள்,

எல்லாம் கிடைக்கும் பட்டணம்
எங்கள் நல்ல பட்டணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதுளை யாம் மாதுளை
மலர் போன்ற மாதுளை.

ஈ முத்து மாதுளை
இனிமை யான மாதுளை.

சிவப்பு நிற மாதுளை
சீனி போன்ற மாதுளை.

சிறுவர் விரும்பும் மாதுளை
சின்ன நல்ல மாதுளை.

ஓடி ஓடி வாருங்கள்
ஒன்று தின்று பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள்நாடு எங்கள்நாடு
என்று பாடிடு
எங்கும்புகழ் பொங்குதென்று
எடுத்துச் சொல்லிடு.

நிலவளமும் நீர்வளமும்
நிறைந்த நாடிது
உழுதுபயன் காணுகின்ற
உண்மை நாடிது.

வளங்கள்பல நிறைந்ததென்று
வகுத்துச் சொல்லிடு
இலங்கையர்கள் நாங்களென்று
இன்பங் கண்டிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கத்தில் கொடியது குடி
பாட்டியார் சொல்வது நொடி
பழங்களைக் கண்டால் கடி
பள்ளிக்குச் செல்லாட்டி அடி.

நல்லதைக் கண்டால் படி
நாடக மேடையில் நடி
கிழவர்கள் கையில் தடி
கம்பத்தில் பறப்பது கொடி.

மின்னி ஒலிப்பது இடி
மீசையில் இருப்பது முடி
தண்ணீரைக் குடத்தால் பிடி
தோட்டம் நிறையச் செடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணே! இந்தா சாப்பிடு
கறியும் சோறும் சாப்பிடு
வண்ணக் கிளியே சாப்பிடு
வளரும் மதியே சாப்பிடு.

கட்டிக் கரும்பே சாப்பிடு
காளைக் கன்றே சாப்பிடு
தட்டிக் கொள்வார் சாப்பிடு
தந்தச் சிலையே சாப்பிடு.

மாதுளம் பூவே சாப்பிடு
மல்லிகை மலரே சாப்பிடு
மாதுளங் கனியே சாப்பிடு
மாமன் வருவார் சாப்பிடு.

வீணை தாரேன் சாப்பிடு
விரும்பித் தாரேன் சாப்பிடு
ஆனை தாரேன் சாப்பிடு
அழாமல் கொஞ்சம் சாப்பிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வா!

கண்ணே மணியே கரும்பே வா
விண்ணே மீனே விளக்கே வா
பண்ணே இசையே பாகே வா
மண்ணே மதியே மலரே வா.

தூங்கும் எழிலே துரையே வா
பாங்குடன் திகழும் பரனே வா
ஓங்கும் மரமே ஒளியே வா
தாங்கும் கிளையே தழையே வா.

கற்பனைக் கடலே கதிரே வா
சிற்பச் சிலையே சிசுவே வா
கற்புக் கடனே கலையே வா
பொற்பின் பொலிவே பொழுதே வா.

முல்லை மலரே முகையே வா
செல்லக் கிளியே செல்வா வா
அல்லி மலரே அரும்பே வா
கள்ள மில்லா கருத்தே வா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியனே!

சூரியனே, சூரியனே
சுந்தர யானவனே - இந்தப்
பாரினிலே நீகொண்ட
பாச மென்னவோ.

காலைவேளை யானவுடன்
கிழக்குப் பக்கமாய் - நீ
மாலைவரை வந்துநின்று
மயக்கஞ் செய்வதேன்.

தாமரைகள் உன்வரவால்
தலையைத் தூக்கியே - தலைக்
காமங்கொண்டு நிற்குமந்த
காட்சி யென்னவோ.

காதலனே பூமிமீது
கண் புதைக்கிறாய் -- உன்
சாதனைகள் மாலைமட்டும்
சிந்தை கொள்ளுவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர் நிறைந்த குளமே — நீ
தண்ணீர் கொஞ்சம் தருவாய்,
தண்ணீர் இன்றி உலகில் — சிறு
தாவரம் கூடத் தழையா.

மீன்கள் துள்ளி உன்னில் — தினம்
மிதந்து ஆடிப் பாடும்,
வான்நிலவு உன்னை நோக்கித் - தூய
வந்தனை செய்து போகும்.

குடத்தைத் தலையில் ஏந்தி - தினம்
கன்னியர் உன்னிடம் வருவர்,
குடத்தை நிரப்பிப் பின்னர் -- அன்ன
நடை நடந்து செல்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவே, நிலவே வாராயோ
நீந்தும் நிலவே வாராயோ.

சிங்கார உந்தன் வடிவத்தை
சிறுவர் கண்டு துள்ளுகிறார்
எங்கும் சுற்றி வருகின்றாய்
ஏனோ எம்மிடம் வரமாட்டாய்.

அரிவாள் போல முதல்நாளில்
அழகாய் வந்து நிற்பாயே
தெரியும் உந்தன் ஜாலமெல்லாம்
திரையில் மறைந்து செல்லாதே.

பொறாமை எண்ணம் உனக்கில்லை
பட்டப் பதவி உனக்கில்லை
சிறுமை கொண்ட மனிதரைப்போல்
சீறும் தன்மை உனக்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் அறிவொளியே - என்னிதய
அமுதக் கடலலையே,
இன்பக் கனிச்சுவையே – எனது
இல்லக் குலக்கொழுந்தே.

தாமரை மலர்முகமும் - உன்
தீஞ்சுவைப் புன்னகையும்
காமனின் மலர்க்கணைபோல் – என்
கருத்தினில் குத்துதடா.

பவளச்சிறு வாய்திறந்து – நீ
பழகுதமிழ் பேசுகையில்,
கவலையெல்லாம் பறந்திடுதே - என்
கண்களும் உறங்கிடுதே

மெல்லநீ அருகுவந்து - ஒரு
முத்தந் தந்துவிடு,
கள்ளமில்லா உன்முகத்தை - என்
கன்னமதில் சேர்த்துவிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
- 5 NOV [illegible]
LIBRARY

ஈகைக் குணைத்தால் உயர்ந்தோர்கள்
உலகில் ஆயிர மாயிரமாம்
வாகை சூடி அதனாலே,
வாழ்ந்தவர் ஆயிர மாயிரமாம்.

ஈயாத செல்வம் உலகிலே
இருந்தால் வாழ்வு சிறக்குமா?
ஈயாத பாவிகள் உலகிலே
இருந்தால் வறுமை நீங்குமா?

ஈகையே சிறந்த பண்பென்று
ஈந்து வாழ்ந்தான் சீதக்காதி
ஈகையே அவனை இன்றளவும்
இயம்பிடச் செய்யும் வித்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணுக்கு அழகு நாணம்
பார்வைக்கு அழகு பச்சை
மண்ணுக்கு அழகு செழுமை
மயிலுக்கு அழகு தோகை.

சிப்பிக்கு அழகு முத்து
சிரிப்புக்கு அழகு பல்லு
செப்புக்கு அழகு வெற்றிலை
சேற்றுக்கு அழகு தாமரை.

ஆணுக்கு அழகு வீரம்
அடுப்புக்கு அழகு நெருப்பு
மானுக்கு அழகு புள்ளி
மீனுக்கு அழகு கண்கள்.

சொல்லுக்கு அழகு செய்கை
சீருக்கு அழகு செல்வம்
பல்லுக்கு அழகு வெண்மை
பாட்டுக்கு அழகு இராகம்.

வானுக்கு அழகு நிலவு
வண்டிக்கு அழகு குதிரை
தேனுக்கு அழகு இனிமை
தென்னைக்கு அழகு ஓலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிலே அணிலே வா வா வா
ஆல மரத்து அணிலே வா
கனிகளைக் கண்டால் விடமாட்டாய்,
கடித்துக் கடித்துப் போட்டிடுவாய்.

முதுகில் மூன்று வரையுடையாய்
முன் கை தன்னால் பழம்பிடிப்பாய்
பதுங்கிப் பதுங்கி நடந்திடுவாய்,
பார்த்தால் விரைவாய் ஓடிடுவாய்.

கிளைகளை விட்டுக் கிளைதாவி
கீழும் மேலும் ஓடிடுவாய்
களைப்பே இல்லை உன் வாழ்வில்
களிப்புடன் என்றும் காணுகிறாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரை, குதிரை மரக்குதிரை
குறும்பு செய்யா(த) மரக்குதிரை
குதித்து ஓடி எஜமானை,
குப்புற தள்ளிப் போடாது.

திசைகள் மாறி ஓடாது
திரும்பும் வரையும் மாறாது
இசையைக் கேட்டுத் துள்ளாது
இருந்த இடத்தை மறவாது.

உண்ண உணவு கேட்காது
உணர்வு இல்லா(த) மரக்குதிரை
எண்ணம் போல அதன்மேலே
ஏறி யாரும் சென்றிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டி நல்ல பாட்டி
பாசம் உள்ள பாட்டி
கூட்டி வைத்து நமக்கு
கதைகள் சொல்லும் பாட்டி.

முதுகு வளைந்த பாட்டி
முடி நரைத்த பாட்டி
முதுமை யான பாட்டி
முத்தங் கொடுக்கும் பாட்டி.

வெற்றிலை போடும் பாட்டி
வேடிக்கை பேசும் பாட்டி
சற்றும் அச்சம் இன்றி
சண்டை போடும் பாட்டி.

பத்துப் பத்து வயது
பார்க்கப் பழுத்த வயது
பத்துப் பத்து வயதில்
பார்க்க நாமும் பாட்டி.

169250

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கியது போதும் – பாப்பா
தூங்கியது போதும்.

காலைக் கதிரவன் கிழக்கினிலே
கால் வைத்துவிட்டான் பாப்பா
வேலைகள் நாடி வந்திருக்கு,
வெயில் ஏறுமுன் எழுந்திருபாப்பா.

காகங் குருவிகள் வானத்திலே
காலைக் கீதம்பாடுது பாப்பா
வாகனம் வீதியில் லடலடவென்று
வந்து போகுது பாப்பா.

படுக்கையைத் தட்டிச் சுருட்டிவிடு,
பள்ளிக்குப் போகணும் பாப்பா
அடுக்களை சுத்தஞ் செய்திடணும்,
அம்மைக்கு உதவிடு பாப்பா.

தூங்கியது போதும் – பாப்பா
தூங்கியது போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ள நினைக்கும் மான் - நீ
தூய நிலா ஒளி வான்,
பள்ளிச் செல்லும் பிள்ளை - நீ
பார்க்க இனிய கிள்ளை.

ஓடும் தெளிந்த தண்ணீர் - நீ
ஓடித் திரியும் மென்னீர்,
ஆடும் அழகிய மயில் - நீ
அந்திப் பாடும் குயில்.

விளையும் நல்ல நிலம் - நீ
வீர மறவர் குலம்.
அலையும் நீலக் கடல் - நீ
அன்புத் தாயின் மடல்.

நினைக்க இனிக்கும் தேன் - நீ
நீண்ட மலர்க் கான்'
அணைக்கும் அன்பு தாய் - நீ
ஆடிப் பாடும் சேய்.

வீசும் தென்றல் காற்று - நீ
விண்ணை முட்டும் கீத்து,
பாசம் மிகுந்த கன்று - நீ
பாடும் இன்பப் பண்ணு.

மலரில் மொய்க்கும் வண்டு - நீ
மங்கையர் கூந்தல் செண்டு,
உலகில் வேறில்லை இன்பம் - நீ
இருப்பதில் வேறில்லை துன்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கேற் றம்மா விளக்கேற்று
வெள்ளி முளைத்தது விளக்கேற்று
விளக்கேற் றம்மா விளக்கேற்று
வீதிக ளெங்கும் விளக்கேற்று.

அசுரன் அழிந்த நாளென்று
ஆடிப் பாடி விளக்கேற்று
அசுரர் இனிமேல் பிறவாமல்
அந்தியும் சந்தியும் விளக்கேற்று.

கொடிய வறுமைப் பிடியகல
கோபுரம் முழுதும் விளக்கேற்று
மடியும் ஏழை எளியவர்
மனத்தில் நல்ல விளக்கேற்று.

MICROFILMED
Positive
Negative
Reel No. 1/058
Date: 24. 09. 91.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையிடையே பிறந்துவந்த மாநதியே - நீ
மாகடலில் கலப்பதேனே மாநதியே,
கலைஞர்களின் கண்களுக்கு மாநதியே - நீ
கார்குழலாய்த் தெரிவதேனே மாநதியே.

எண்ணில்லாப் பண்டங்களை மாநதியே - நீ
எங்கெடுத்துச் செல்லுகிறாய் மாநதியே,
வணிகனென்று சொல்லிவிட்டால் மாநதியே-நீ
விலைகூறி விற்பதென்ன மாநதியே.

கரையுடைத்துச் செல்லுகையில் மாநதியே -நீ
கருணையில்லா மனிதனைப்பாய் மாநதியே,
திரைபோல எழும்பிவந்து மாநதியே, — நீ
தெரிவதெல்லாம் திருடுவதேன் மாநதியே.

கதிரவன் சூட்டினால் மாநதியே - நீ
ககனத்து முகிலானாய் மாநதியே,
கதிர்வளர துணையானாய் மாநதியே — நீ
காலமெல்லாம் வாழ்ந்திடுவாய் மாநதியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாட்டும் | பக்கமும் |
| --- | --- |


தங்கை, தம்பியர்க்கு ... ... ... 1
இறைவா! ... ... ... 3
பண்பு ... ... ... 4
பாப்பா ... ... ... 5
எங்கள் ஊரில் ... ... ... 6
உண்டு ... ... ... 7
வெள்ளி நிலா ... ... ... 8
மீன்கள் ... ... ... 9
ஒன்று பத்து ... ... ... 10
பட்டணம் ... ... ... 11
மாதுளை ... ... ... 12
எங்கள் நாடு ... ... ... 13
பழக்கம் ... ... ... 14
சாப்பிடு ... ... ... 15
வா! ... ... ... 16
சூரியனே! ... ... ... 17
குளமே! ... ... ... 18
நிலவே! ... ... ... 19
குழந்தை முகம் ... ... ... 20
ஈகை ... ... ... 21
அழகு ... ... ... 22
அணிலே! ... ... ... 23
குதிரை ... ... ... 24
பாட்டி ... ... ... 25
தூங்கியது போதும் ... ... ... 26
நீ ... ... ... 27
விளக்கேற்று ... ... ... 28
மாநதியே! ... ... ... 29



MICROFILMED
Positive
Negative /
Reel No. / 1658
Date 24.09.91
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Class No. 894.811.17

Acc. No. 169250

This book is returnable on or before the last date stamped below.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனும்பிகா

ஊவா மாகாணத்தில் மாபெரும்

புத்தக நிலையம்

உங்களுக்குத் தேவையான
தமிழ், ஆங்கில, சிங்கள, புத்தகங்கள்
பாடசாலைப் புத்தகங்கள்,
உபகரணங்கள், தின, வார,
மாதப்பத்திரிகைகள், சினிமாப்பாடல்கள்,
புதினங்கள், திருமணப்பரிசு நூல்கள்
வாழ்த்துக்கள் யாவற்றையும்
பெற ஒரே ஸ்தாபனம்.

## மீனும்பிகா புத்தகசாலை


169250

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org